மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, சட்டியில் இருந்தால் தான் அகப்பையில் வரும். சட்டியில் இருப்பதை வைத்துக்கொண்டு சில விடுதிகளை இந்தத் துறை கட்டிக் கொண்டிருக்கிறது. 1977-க்குப் பிறகு நான்கு விடுதிகளை கட்டுவதற்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. இனிமேல் படிப்படியாக இவற்றை கட்டுவதற்கு அரசு ஆலோசித்துவருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சாதியற்ற சமுதாயம் அமைப்போம் என்று எல்லா அரசியல்வாதிகளும் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இப்போதும் அரிசன மாணவர் விடுதிகள் என்று தான் இருக்கிறது. ஆகவே இதில் அரிசன என்ற சொல்லை எடுத்துவிட்டு மாணவர் விடுதி என்று மட்டும் வைத்துக் கொள்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஜாதியற்ற சமுதாயம் அமைப்போம் என்று எல்லா அரசியல் வாதிகளும் பேசிக்கொண்டிருக்கிறோம் என்று உறுப்பினர் கூறினார் இனியும் பேசிக்கொண்டே இருப்போம். இப்போது அரிசன மாணவர் விடுதி என்பதை அரசினர் மாணவர் விடுதி என்று அரசு மாற்றியிருக்கிறது.

கொடைக்கானல் மலைப்பகுதியில் அலுமினிய பாக்சைட்.

*520 வினா—திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொடைக்கானல் மலைப்பகுதியில் அலுமினியம் பாக்சைட் கனிகள் இருப்பது ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் அவைகளை பயன்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) 7—10—1968 தேதியிட்ட தொழில்துறை அரசு ஆணை எண் 3459-ல், ' மால்கோ ' என்று அழைக்கப்படும் மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி நிறுவனத்திற்கு கொடைக்கானல் பகுதியில் 960 ஏக்கர்கள் பரப்பில் முப்பது ஆண்டுகளுக்கு பாக்சைட் வெட்டியெடுத்துக்கொள்ள சுரங்கக் குத்தகை வழங்கப் பட்டுள்ளது.

1979 மார்ச் 24]

மால்கோ நிறுவனம், இந்தப் பகுதியில் கோனல் ஆறு வனப் பகுதியில் சில நிலங்கள் தவிர பாக்சைட் கிடைக்கும் ஏனைய எல்லா நிலங்களையும் விலை கொடுத்துச் சொந்தமாக வாங்கியுள்ளது. அரசின் வனத்துறையுடன் தொடர்புகொண்டு கனிகள் கிடைக்கும் வனப்பகுதி நிலங்களையும் உரிமை கொள்ள முயற்சிகள் தொடரப்பட்டு வருகின்றன. மேட்டூர் அருகேயுள்ள மால்கோ நிறுவனத்தின் கச்சாப் பொருள் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்த கனிகள் விரைவில் வெட்டியெடுக்கப்படவுள்ளது.

திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த கொடைக்கானல் மலைப் பகுதியில் அலுமினியம் பாக்சைட் கனிகள் அதிகமாக இருக்கின்றன. தமிழகத்தில் இயற்கை வளங்கள் கொஞ்சுகின்ற கொடைக்கானல் பகுதியில் இவை கிடைக்கின்றன. 1968-ல் இதை எடுப்பதற்காக மால்கோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஆனால் விரைவாக செயல்படவில்லை. இதற்குக் காரணம் மத்திய அரசா அல்லது மாநில அரசா ? ஆகவே விரைவாக செயல்படுவதற்கும் இதற்கு ஊக்கம் அளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1979ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து இந்தக் கனிகள் வெட்டி எடுக்க தொடங்கியிருக்கிறார்கள். இதுவரை 842 டன்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கனி வெட்டும் திட்டத்திற்கான உரிமம் மால்கோ நிறுவனத்திற்கு எந்த அடிப்படையில் அளிக்கப்பட்டது ? அதற்கு காலவரையறை ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ? இதற்கு உரிமம் அளிக்கப்பட்டவர்களிடமிருந்து ஏதேனும் பாக்கி அரசுக்கு வரவேண்டியிருக்கிறதா ? அப்படியென்றால் எவ்வளவு வரவேண்டியிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : என்னுடைய விடையிலேயே இதைச் சொல்லியிருக்கிறேன். 30 ஆண்டுகளுக்கு அலுமினியம் பாக்ஸைட் வெட்டியெடுப்பதற்கு சுரங்க குத்தகை அளிக்கப்பட்டிருக்கிறது. ராயல்டியாக 4 ரூபாய் ஒரு டன்னுக்கு (பெர் டன்) என்ற அளவில் அரசுக்கு கிடைக்கிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS